செய்தி மடல் 2 - 2012

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

# NEWSLETTER 2

**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE INC.**

**P.O. Box 557, WENTWORTHVILLE - 2145**

**Web: http://www.wtsc.org.au**

**Email: info@wtsc.org.au**

**ABN: 43 062 675 091**

**02 – 06 – 2012**

செய்தி மடல் 2

02 – 06 – 2012

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

Wentworthville Tamil Study Centre Inc.

Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145


இவ்வருடத்திற்கான எமது பாடசாலையின் கருப்பொருள் (Theme),

# உலகமயமாதலில் தமிழ்



இவ்வருடத்திற்கான கலைவிழா இக் கருப்பொருளை மையமாக கொண்டு மூன்றாம் தவணை நடைபெறும்.

**வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் இவ்வருடத்திற்கான தமிழ் அறிவுப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் முதலாம் தவணை இறுதியிலும் இரண்டாம் தவணை ஆரம்பத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.**

**1. தமிழ் அறிவுப் போட்டிகள்:**

கடந்த March 24 ம் திகதி முன்பள்ளியிலிருந்து ஆண்டு 4 வரையான வகுப்பு மாணவர்களிற்கான தமிழ் அறிவுப்போட்டி நடைபெற்றது.

இப்போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களை பாராட்டுவதோடு அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் இப்போட்டிகளை நடாத்துவதற்கு உதவிசெய்த அனைவருக்கும் நிர்வாகக் குழுவினர் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இப்போட்டிகளுக்கான வினாக்களைத் தயாரித்தும், மற்றும் நடுவர்களாக கடமை ஆற்றிய பெற்றோர்கள், எமது பாடசாலை ஆசிரியர்களிற்கும் எமது நன்றிகள்.

**2. பேச்சுப் போட்டிகள்:**

இந்த வருடத்திற்கான பேச்சுப் போட்டிகள் March 31, May 5, 12, 19 ஆகிய திகதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வருடத்திற்கான பேச்சுப் போட்டிகள் "***உலகமயமாதலில் தமிழ்***" என்னும் கருப்பொருளை மையமாக கொண்டு இடம்பெற்றன.

இப்போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களை பாராட்டுவதோடு அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிற்கும் நிர்வாகக் குழுவினர் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

மேலும் இப்போட்டிகளிற்கு நடுவர்களாக செயற்பட்டு மாணவர்களின் திறமைகளை மதிப்பீடுசெய்த நடுவர்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

பேச்சுப் போட்டிக்கான ஆக்கங்களை தயாரித்துத் தந்த எமது பாடசாலை ஆசிரியர்களிற்கும் அவற்றை சரி பார்த்து உதவிய வானொலி மாமா என்று அழைக்கப்படும் திரு ந. மகேசன் அவர்களிற்கும் எமது நன்றிகள்.

இப்போட்டிகள் தொடர்பான பெற்றோர்களின் **ஆக்கபூர்வமான கருத்துக்களை** எதிர்பாற்கிறோம்




இந்த வருடத்திற்கான வகுப்பு புகைப்படம் June 23 ம் திகதி அன்றும் June 30 ம் திகதி அன்றும் எடுக்கப்படும்.

- June 23 : முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, ஆண்டு 1, ஆண்டு 2 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், நிர்வாக குழு.
- June 30 : ஆண்டு 3 ம் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள்.

அன்றையதினம் மாணவர்களிற்கு தமிழர் கலாச்சாரத்தை எடுத்தியம்பும் ஆடைகளை அணிவித்து அனுப்புமாறு பெற்றோர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**3. கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை:**

நியூ சவுத்வேல்ஸ் மாநில தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் நடாத்தப்படும் கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை எதிர்வரும் June 23 ம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஆண்டு இரண்டிற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் June 9 ம் திகதி ஆகும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை June 9 ம் திகதிக்கு முன்னதாக வகுப்பு ஆசிரியர்களிடம் கையளிகக்வும்.

ஆண்டு இரண்டிற்கு மேல் உள்ள மாணவர்கள் அனைவரையும் இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களிற்குமான பரீட்சைக் கட்டணத்தை வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் செலுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ஆகையினால் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்துடன் எவ்வித கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

இப்பரீட்சைகள் இளநிலை, இடைநிலை – கீழ்பிரிவு, இடைநிலை – மேல்பிரிவு, முதுநிலை ஆகிய நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

**இளநிலை** – 31-07-2012 அன்று 10 வயதிற்கு குறைவான வயதினை உடைய மாணவர்கள்.

**இடைநிலை கீழ்பிரிவு** – 31-07-2012 அன்று 10 வயதிற்கும் 13 வயதிற்கும் இடைப்பட்ட வயதினை உடைய மாணவர்கள்.

**இடைநிலை மேல்பிரிவு** – 31-07-2012 அன்று 13 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட வயதினை உடைய மாணவர்கள்.

**முதுநிலை** – 31-07-2012 அன்று 16 வயதிற்கு மேற்பட்ட வயதினை உடைய மாணவர்கள்.

- மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு தோற்றுவதாயின் தங்களது வயதுக்குரிய பிரிவிலும் அதற்கு மேற்பட்ட ஒரு பிரிவிலுமே தோற்ற முடியும். ஆனால் அவர்கள் அவர்களுடைய வயதுக்குரிய பிரிவிலேயே பரிசில்பெறக் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் ஏனைய பிரிவுகளில் பரிசில்பெறக் கவனத்தில் எடுக்கப்பட மாட்டார்கள்.

- கடந்த மூன்று வருடங்களுக்குள் தமிழ் பேசும் நாடுகளில் இருந்து வருகை தந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்பட மாட்டாது.

- பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை அதிபர் திரு கணநாதன் அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

கடந்த வருடம் நியூ சவுத்வேல்ஸ் மாநில தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் நடாத்தப்பட்ட தமிழப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சைக்கான சான்றிதழ்கள் கடந்தவாரங்களில் எமது பாடசாலை ஒன்றுகூடலின்போது வழங்கப்பட்டன. இச்சான்றிதழ் கிடைக்கப்பெறாத மாணவர்கள் அதிபர் திரு கணநாதன் அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.




இந்த வருடத்தின் முதலாம் தவணையில் 184 மாணவர்கள் 100% வருகை தந்து சாதனை படைத்துள்ளனர். அவர்களிற்கு எமது பாராட்டுக்களுடன் அவர்களை ஊக்குவித்த பெற்றோர்களுக்கும் எமது நன்றிகள். இவ் வரவிற்கான சான்றிதழ்கள் வகுப்பு ஆசிரியர்களுடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இச்சான்றிதழ் கிடைக்கப்பெறாத மாணவர்கள் தங்களது வகுப்பு ஆசிரியர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.







பெற்றோர்கள் தயவுசெய்து பாடசாலை சுற்றாடலில் உள்ள வீடுகளின் வாகனம் செல்லும் பாதைகளை (Driveway) மறித்து தமது வாகனங்களை நிறுத்தவோ இப்பாதைகளை பாவித்து தமது வாகனங்களைத் திருப்பவோ ("U" Turn) வேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவை சட்டவிரோத செயல்கள் மட்டுமல்லாது பாடசாலை சுற்றாடலில் உள்ளவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.

எமது நிர்வாகத்திற்கு அண்மைக்காலமாக இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகையினால் தயவுசெய்து வாகனங்களை வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய பாதை ஓரத்தில் நிறுத்தி வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளிற்கு உதவி செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.




**4. பெற்றோர் ஆசிரியர்கள் கலந்துரையாடல்:**

பெற்றோர் ஆசிரியர்கள் கலந்துரையாடல் எதிர்வரும் June 30 ந் திகதி நடைபெறும். அன்றைய தினம் பெற்றோர் ஆசிரியர்களை 2:15 மணிக்கும் 4:30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சந்தித்து மாணவர்களின் முன்னேற்றம் பற்றி கலந்துரையாடலாம்.

இதற்காக ஒரு மாணவருக்கு 5 நிமிடம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தமக்குரிய நேரத்தை முன்கூட்டியே ஆசிரியர்களிடம் பதிவு செய்து கொள்ளவும்.

**5. அரை ஆண்டுப்பரீட்சை**



மாணவர்களுக்கு இரண்டாம் தவணைக்கான அரை ஆண்டுப்பரீட்சை June 16 ம் திகதி நடைபெறும்.

மாணவர்களை இப்பரீட்சைக்கு தயார்படுத்தி அனுப்புமாறு பெற்றோர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**6. மாணவர் அறிக்கை**

இரண்டாம் தவணைக்கான மாணவர் அறிக்கை June 30 ம் திகதி வழங்கப்படும்

**7. தமிழ் ஊக்குவிப்புப் போட்டி**

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டி பற்றிய தகவல்களை அதன் அமைப்பாளர்களிடம் இருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

அல்லது http://www.tamilcompetition.org/ என்னும் அவர்களது இணையத்தளத்திலிருந்தும் இதற்கான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

## 10. ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

நியூசவுத்வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் ஆண்டு 3 இல் இருந்து ஆண்டு 6 வரையிலான வகுப்பு ஆசிரியர்களிற்கான பயிற்ச்சிப்பட்டறை April 21 ம் திகதி கிரவின் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக Director of NSW Curriculum and Learning Innovation Centre திரு Raju Varanasi அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்விலிருந்து சில பதிவுகள் …





## 10. மந்திரி விருதுக்கான விண்ணப்பங்கள்

இவ்வாண்டுக்குரிய சமூகமொழிப் பாடசாலை மாணவர்களுக்கான மந்திரி விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மேலதிக விபரங்களை அதிபர் திரு கணநாதன் அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

இவ்விருதுகள் கீழ்பிரிவு மற்றும் மேல்பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளாக வழங்கப்படும்



பாடசாலை முடிவடையும் நேரத்தில் ஒருசில பெற்றோர்கள் பாடசாலை வீதியில் பாடசாலைக்கு மிக அண்மையான வாகனத்தரிப்பிடத்தை எதிர்பார்த்து தொடர்சியாக வாகனத்தை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலை வீதியில் வாகன நெரிசலை ஏற்படுத்துவதுடன் மாணவர்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

எனவே பெற்றோர்கள் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து தங்களது வாகனங்களை சிறிது தொலைவிலாவது நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



கடந்த தவணை தமிழ்ப் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தந்து நியு சவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியத்தை எமது பாடசாலைக்குப் பெற்றுத்தர உதவி செய்த மாணவர்களிற்கு எமது நன்றிகள்.

## பெற்றோர்களின் கவனத்திற்கு !!!



**உங்கள் பிள்ளைகளிற்கான தவணைக் கட்டணங்களை செலுத்திவிட்டீர்களா ?**

### 1. பாடசாலை நேரம்:

பிள்ளைகளை பாடசாலைக்கு உரியநேரத்தில் அனுப்பி வைக்குமாறும், முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

ஆரம்பமாகும் நேரம்: பிற்பகல் 2:00 மணி
முடிவடையம் நேரம்: பிற்பகல் 4:30 மணி

முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி மாணவர்களை அவர்களின் வகுப்பிலிருந்து பிற்பகல் 4:20 மணிக்கு அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

### 2. வாகனத்தரிப்பிடம்:

பாடசாலையின் வாகனத்தரிப்பிடம் பிற்பகல் 2:15 மணிக்கு பூட்டப்பட்டு மீண்டும் பிற்பகல் 4:10 மணிக்கு திறக்கப்படும்.

பாடசாலைச் சுற்றாடலில் வாகனங்களை வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய நிறுத்தி வைப்பதோடு உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். குறிப்பாக பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் முடிவடையம் நேரத்திலும் வாகனப்போக்குவரத்து அதிகமாக இருப்பதனால் இந்த நேரங்களில் அதிக கவனம் செலுத்தவும்.

### 3. பெற்றோர்களின் உதவி:




- ❖ பாடசாலை ஆரம்பமாகும் போதும், பாடசாலை முடிவடையம் போதும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வாகனத்தரிப்பிடத்தைக் கண்காணிக்கவும் பெற்றோர்களின் உதவி தேவைப்படுகின்றது. தயவுசெய்து இந்நடவடிக்கைகளுக்கு பெற்றோர்களை உதவிசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
- ❖ வகுப்பு இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்குவதற்கும் விளையாட்டுமைதானத்தில் அவர்களை கண்காணிப்பதற்கும் பெற்றோர்களின் உதவி மிகவும் தேவையாக உள்ளது. இடைவேளை நேரம் பிற்பகல் 3:15 மணி தொடக்கம் பிற்பகல் 3:30 மணி வரை ஆகும்.
- ❖ பங்களிப்பு செய்ய விரும்பும் பெற்றோர்கள் பாடசாலை நேரத்தில் ஒன்றுகூடல் நடைபெறும் இடத்தில் உள்ள எமது செயற்குழு உறுப்பினர்களை தொடர்பு கொள்ளவும். அல்லது எமது செயற்குழுவின் தலைவர் திரு. இ.இராஜேஸ்வரன் (0 400 363 395) அல்லது செயலாளர் திரு. இ.சுந்தரகுமார் (0 400 829 709) அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### 4. முதலுதவி சேவை:

மாணவர்களுக்கு முதலுதவி (First Aid) தேவை ஏற்படின் அவர்களிற்கு முதலுதவி செய்வதற்காக வைத்தியர்களாக உள்ள சில பெற்றோர்கள் சுழற்சி முறையில் உதவி செய்கின்றனர். இவர்களின் இந்த அளப்பரிய சேவையை வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் மனதாரப் பாராட்டுகின்றது.

### 5. மாணவர்களின் விபரங்கள்:

மாணவர்களின் விபரங்கள் (பெயர், வகுப்பு, கல்வி கற்கும் பிரதான பாடசாலை, பிறந்த திகதி, தெலைபேசி இலக்கம், வதிவிட முகவரி, மின் அஞ்சல் முகவரி) சரியாக இருப்பதை நாம் ஒவ்வொரு வருடமும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விபரங்களை இதுவரை கொடுக்காத பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் அதனை தாமதமின்றி எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**6. பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்குமுறைகள்:**

- ❖ மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.
- ❖ உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றபின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்குச் செல்லவேண்டும்.
- ❖ மாணவர்கள் வகுப்பறையில் உள்ள பொருட்களை சொந்தத்தேவைகளுக்குப் பயன்படுத்தாமலும், அவற்றை சேதப்படுத்தாமலும் இருத்தல் வேண்டும்.
- ❖ மாணவர்கள் பாடசாலையின் வாகனத்தரிப்பிடங்களிற்கு செல்லுதல் கூடாது.

**7. தவணைக்கட்டணங்கள்:**

சென்ற ஆண்டு அல்லது இந்த ஆண்டு தவணைக்கட்டணங்களை இதுவரை செலுத்தாத பெற்றோர்கள் தயவுசெய்து அவற்றை செலுத்தி எமது பாடசாலை நிர்வாகத்திற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8. மின்னஞ்சல் தொடர்பாடல்**

இனிவரும் காலங்களில் வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் பெற்றோர்களுடனான தொடர்புகளை மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது. எனவே தயவுசெய்து உங்களின் நாளாந்த பாவனையில் உள்ள மின்னஞ்சல் முகவரியினை எமக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**10. கலை விழாவும் வருடாந்த இராப்போசன விருந்தும்**

எமது பாடசாலையின் இந்த வருடத்திற்கான கலைவிழா வருகின்ற September மாதம் 2 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 1:00 மணிக்கு Campbell Street, Blacktown இல் அமைந்துள்ள Bowman Hall இல் நடைபெறும்.

இந்த வருடத்திற்கான பரிசளிப்புவிழாவும் வருடாந்த இராப்போசன விருந்தும் வருகின்ற December மாதம் 9 ந் திகதி பிற்பகல் 4:00 மணிக்கு Campbell Street, Blacktown இல் அமைந்துள்ள Bowman Hall இல் நடைபெறும்.

இந்த விழாக்களை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கு பெற்றோர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறும் அத்துடன் எம்முடன் கூடஇருந்து உங்கள் ஒத்துழைப்பையும் உதவிகளையும் நல்குமாறும் கலாச்சார உபகுழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். மேலதிக விபரங்களிற்கு நிர்வாக குழுவின் உப தலைவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

திரு கு சந்திரமோகன் 02 9688 3959
திரு செ பகீரதன் 0 417 246 510

இவை தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**11. உயர்தர பாடசாலை (HSC பரீட்சைக்கு தோற்றும்) மாணவர்களிற்கான வகுப்புக்கள்:**

ஆண்டு 10, 11 மற்றும் 12 (HSC பரிட்சைகது தேற்றும்) உயா்தர பாடசாலை மாணவர்களிற்கு சனிக்கிழமைகளில் மேலதிக வகுப்புக்கள் மாலை 4:30 மணியிலிருந்து 5:30 மணிவரை நடைபெறுகின்றன.

மேலும் பெற்றோர்களினாலும் நலன் விரும்பிகளினாலும் ஆண்டு 10, 11 மற்றும் 12 (HSC பரிட்சைக்கு தேற்றும்) மாணவர்களிற்கு ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலை 7:00 மணியிலிருந்து 9:00 மணிவரை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்புக்கள் தொடர்ந்து ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். பெற்றோர்களும் விரும்பினால் இந்த வகுப்பில் பங்குபற்றலாம்.

**12. பாடசாலை விடுமுறை**

இரண்டாம் தவணைக்கான இறுதி வகுப்புக்கள் June 30 ந் திகதி நடைபெறும். இதைத்தெடர்ந்து பாடசாலை விடுமுறையின் பின்னர் மூன்றாம் தவணைக்கான வகுப்புக்கள் July 21 ந் திகதி ஆரம்பமாகும்.

மாணவர்களது விடுமுறை காலம் இனிதாகவும் பாதுகாப்பானதாகவும் அமைய எமது வாழ்த்துக்கள்.



# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

## Wentwothville Tamil Study Centre

## பாடசாலை நாட்காட்டி - 2012

| | திகதி | தமிழ் மொழி வாழ்த்து / பாடசாலைக் கீதம் | ஒன்றுகூடல் நிகழ்ச்சி | வாரம் | நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் | போட்டிகள் / மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| தவணை 1 | 28-Jan-12 | | | | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| | 04-Feb-12 | Y9/K-A | Y10/11 (HSC) | 1 | பாடசாலை ஆரம்பம் | |
| | 11-Feb-12 | Y8/K-B | Y10/11 ( NON HSC) | 2 | | |
| | 18-Feb-12 | Y7/K-C | Y9 | 3 | | |
| | 25-Feb-12 | Y6/Y1-A | Y8 | 4 | பெற்றோர்கள்/செயற்குழு கலந்துரையாடல் (கீழ் வகுப்புக்கள்) | |
| | 03-Mar-12 | Y5/Y1-B | Y7 | 5 | பெற்றோர்கள்/செயற்குழு கலந்துரையாடல் (மேல் வகுப்புக்கள்) | |
| | 10-Mar-12 | Y4 | Kinder -A | 6 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்பு ஆசிரியர்கள்) மாணவர்களிற்கு பேச்சுப் போட்டி வழங்குதல்மாணவர்களிற்கு பேச்சுப் போட்டி வழங்குதல் (ஆண்டு 7 - 12) | வகுப்பு வேலை |
| | 17-Mar-12 | Y9 | Kinder -B | 7 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 24-Mar-12 | Y3-A | Kinder-C | 8 | பேச்சுப் போட்டி மீளாய்வு | தமிழ் அறிவுப் போட்டி * (ஆரம்பப்பள்ளி - ஆண்டு 4) |
| | 31-Mar-12 | Y3-B | Year 1 - A | 9 | மாணவர்களிற்கு பேச்சுப் போட்டி வழங்குதல் (ஆரம்பப்பள்ளி - ஆண்டு 6) | பேச்சுப் போட்டி * (ஆண்டு 7 - 12) |
| | 07-Apr-12<br>14-Apr-12<br>21-Apr-12 | பாடசாலை விடுமுறை | | | | |
| தவணை 2 | 28-Apr-12 | All | | 1 | | |
| | 05-May-12 | Y2-A | Y6 | 2 | | பேச்சுப் போட்டி * (ஆரம்பப்பள்ளி - ஆண்டு 6) |
| | 12-May-12 | Y2-B | Y5 | 3 | | |
| | 19-May-12 | Y11/12 & Prep | Y4 | 4 | | |
| | 26-May-12 | Y10 (HSC) | Year 1 - B | 5 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 02-Jun-12 | Y10/11(Non HSC) | Y3-A | 6 | | மீட்டல் (Revision) |
| | 09-Jun-12 | Y9/Bridging | Y3-B | 7 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 16-Jun-12 | Y8/K-A | Y2-A | 8 | | அரை ஆண்டுப்பரீட்சை |
| | 23-Jun-12 | Y7/K-B | Y2-B | 9 | வகுப்பு புகைப்படம் எடுத்தல் (Photo day) | |
| | 30-Jun-12 | Y6/K-C | Preparatory | 10 | வகுப்பு புகைப்படம் எடுத்தல் (Photo day) பெற்றோர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | மாணவர் அறிக்கை |
| | 07-Jul-12<br>14-Jul-12 | பாடசாலை விடுமுறை | | | | |
| தவணை 3 | 21-Jul-12 | All | | 1 | | |
| | 28-Jul-12 | Y5 | Bridging | 2 | | |
| | 04-Aug-12 | Y4-A | Y10/11 (HSC) | 3 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 11-Aug-12 | Y4-B | Y10/11 ( NON HSC) | 4 | | |
| | 18-Aug-12 | Y3-A | Y9 | 5 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 25-Aug-12 | Y3-B | Y8 | 6 | | |
| | 01-Sep-12 | Y2-A | Y7 | 7 | | |
| | 02-Sep-12 | கலைவிழா | | | | |
| | 08-Sep-12 | Y2-B | Kinder-A | 8 | | |
| | 15-Sep-12 | Y1-A | Kinder-B | 9 | | வகுப்பு வேலை |
| | 22-Sep-12 | Y1-B | Kinder-C | 10 | | |
| | 29-Sep-12<br>06-Oct-12 | பாடசாலை விடுமுறை | | | | |
| தவணை 4 | 13-Oct-12 | All | | 1 | | |
| | 20-Oct-12 | Y9 | Y6 | 2 | | தமிழ் அறிவுப் போட்டி * (ஆண்டு 5 - ஆண்டு 12) |
| | 27-Oct-12 | Y8 | Y5 | 3 | | |
| | 03-Nov-12 | Y7 | Y4 | 4 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (கீழ் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 10-Nov-12 | Y6 | Y1 -C | 5 | | எழுத்துப் போட்டி |
| | 17-Nov-12 | Y5 | Y3-A | 6 | | வாசிப்புப் போட்டி |
| | 24-Nov-12 | Y4 | Y3-B | 7 | | |
| | 01-Dec-12 | Y3 | Y2-A | 8 | அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் (மேல் வகுப்பு ஆசிரியர்கள்) | |
| | 08-Dec-12 | | | 9 | | |
| | 09-Dec-12 | பரிசளிப்பும் இராப்போசனமும் | | | | |
| | 15-Dec-12 | Y2 | Y2-A | 10 | | |
| | 22-Dec-12 | All | Y2-B | 11 | இறுதி நாள் நிகழ்ச்சிகள். நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஒன்றுகூடல் (தேநீர் விருந்து) | மாணவர் அறிக்கை |